பக்கங்கள்:-23

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | தை 22 | வியாழக்கிழமை | 05.02.2026 | அதிர்வு 189

## செயற்பாட்டு அரசியலுக்கு விடை கொடுத்த மைத்திரி



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, செயற்பாட்டு அரசியலில் இருந்து ஒதுங்கியுள்ளார். 06



# அடக்குமுறைகள் தொடர்ந்தால் மக்கள் மீண்டும் கிளர்ந்தெழுவர்

## ராஜபக்ஷக்கள் போல் அநுர தரப்பும் வீட்டுக்குச் செல்ல நேரிடும் என்று ராஜித சேனாரத்ன பகிரங்க எச்சரிக்கை

“அநுர அரசு தொடர்ந்தும் அடக்குமுறைகளைப் பிரயோகித்துக் கொண்டிருக்குமாயின் நாட்டில் மீண்டும் மக்கள் கிளர்ந்தெழுவார்கள். ராஜபக்ஷ அரசு போல் இந்த அரசும் வீட்டுக்குச் செல்ல வேண்டி வரும்.”

- இவ்வாறு முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார். 06



### சொற்களை விட செயலே முக்கியம்

# நம்பிக்கையைத் துரிதமாக கட்டியெழுப்பும் அநுர அரசு

## சுதந்திர தின உரையில் வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

“சுதந்திர தினம் என்பது வடக்கை பொறுத்தவரை கடந்த காலங்களில் ஒரு கரிநாளாகப் பார்க்கப்பட்ட போதிலும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தற்போதைய அரசு ‘சொற்களை விட செயலே முக்கியம்’ என்ற அடிப்படையில் நம்பிக்கையைத் துரிதமாகக் கட்டியெழுப்பி 06




திருகோணமலையில் புத்தர் சிலை வைப்பதில் ஆரவாரம் காட்டி, அடாவடித்தனம் பண்ணிய பிக்குகள் குழுவினர் இப்போது ஆப்பிழுத்த குரங்கின் நிலையில் சிக்கி இருக்கின்றனர் என்றே தோன்றுகின்றது.

திருகோணமலை நீதிவான் நீதிமன்றம் வழங்கிய விளக்கமறியல் உத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனு மூலம் தள்ளுபடி செய்யலாம் என்ற அவர்களது எதிர்பார்ப்பு தவிடுபொடியாகி விட்டது.

பௌத்தத்தின் பெயரால் என்ன அடாவடித்தனம் பண்ணினாலும் ஆட்சியாளர்களுக்குச் சகித்துப் பொறுத்திருப்பதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்று நினைத்துக் கொண்டுதான் இத்தகைய அத்துமீறல்களும் அட்டூழியங்களும் சர்வ சாதாரணமாக மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஆனால் இந்த பிக்குகளின் விளக்கமறியலுக்கு எதிரான ரி ட் மனுக்களின் மீது சட்டமா அதிபர் திணைக்களம் முழு மூச்சில் காட்டிய சட்ட எதிர்வாதம் களநிலைமை அடியோடு மாறி 06

# இனவாதமற்ற அரசியல் பயணம்: என்.பி.பி. அரசுக்கு வாசு பாராட்டு



“இனவாதம் அற்ற பயணத்தை தேசிய மக்கள் சக்தி அரசு ஆரம்பித்திருப்பதே சிறப்பான ஆரம்பமாகும்.” – என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“இனவாதம் மற்றும் மதவாதத்துக்கு இடமில்லை என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க திட்டவட்டமாக அறிவித்துள்ளார். அவரின் அந்த எதிர்பார்ப்பு நிறைவேற வேண்டும்.

ஏனைய அரசுகளுடன் ஒப்பிடுகையில் இது மாறுபட்ட அரசாகும். பிரபு வர்க்கத்தினர் அல்லர். சாதாரண மக்களே ஆட்சியில் உள்ளனர்.

எனவே, ஏற்பட்ட மாற்றத்தைச் சிறந்த மாற்றமாக மாற்றுவதற்கு ஒன்றிணைவோம்.” – என்றார்.

# சுதந்திர தினம் தமிழ் மக்களுக்கு ஒரு கரிநாளாகவே காணப்படும்!

## நாடாளுமன்றத்தில் சாணக்கியன் விவரிப்பு




இந்த நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொள்ளும் வேளையில், முழுவதும் அரசால் 78ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பல்வேறு ஆயத்தங்கள் நடைபெற்று வருவதை நாம் காண்கிறோம்.

எங்களுக்குச் சுதந்திரம் இல்லாத நிலையில், 77, 78 என ஆண்டுகளை எண்ணிக் கொண்டாடுவதற்கு எங்களுக்குத் தேவையில்லை. 78ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் பலவிதமான நிகழ்வுகள், விழாக்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. கிழக்கு மாகாணத்திலும் சுதந்திர தின நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. அதற்கான அழைப்புகள் எங்களுக்கு வழங்கப்பட்டன. அதேபோல் கொழும்பிலும் நடைபெறவுள்ள சுதந்திர விழாக்களில் பங்கேற்குமாறு பலமுறை தொலைபேசி அழைப்புகள் வந்தன.

ஆனால், எங்களுடைய மக்களின் தேசியப் பிரச்சினைக்கு இதுவரை எந்தத் தீர்வும் வழங்கப்படாத நிலையில், இந்த நாட்டில் சுதந்திரத்தை கொண்டாட முயற்சிப்பது எங்களைப் பொறுத்தவரை ஒரு வேதனையான, விரோதமான உணர்வையே ஏற்படுத்துகிறது.

இன்று நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில், பெப்ரவரி 4ஆம் திகதி “கரிநாள்” என அறிவிக்கப்பட்டு, தமிழ் மக்களுக்கு உண்மையான சுதந்திரம் இல்லை என்ற நிலைப்பாட்டில் பல எதிர்ப்புகள் நடைபெற்று வருகின்றன. இத்தகைய சூழ்நிலையில், எங்களுடைய தேசியப் பிரச்சினைக்கு தீர்வு வழங்காமல் தொடர்ந்து சுதந்திர விழாக்களை நடத்திக் கொண்டே செல்லும் அரசியல் நடைமுறை ஏற்றுக்கொள்ள முடியாததாக உள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் கூட, தமிழர்களுக்கான சுதந்திரம் என்பது மறக்கப்பட்ட மற்றும் புறக்கணிக்கப்பட்ட விடயமாகவே உள்ளது. தொடர்ச்சியாக எங்களுடைய நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. உரிமைகள் மறுக்கப்படுகின்றன. 48 ஆண்டுகளாக நடைபெற்று வரும் நில அபகரிப்பு நடவடிக்கைகள், இன்றும் சுதந்திர தினம் பற்றி பேசப்படும் காலத்திலும் தொடர்கின்றன.

இன்று காலை கூட, ஜனாதிபதி அவர்கள் சுதந்திர தினத்தை முன்னிட்டு 49 கைதிகளை விடுதலை செய்கிறார் என அறிவித்திருந்தார். ஆனால், எமது அரசியல் கைதிகள் தொடர்பான விடயத்தில், இந்த அவையில் உள்ள தமிழ் பிரதிநிதிகளுக்கு அது மிகுந்த அவமானமாகவே உணரப்படுகிறது. ஏனெனில், தேர்தல் பிரசார காலத்தில் அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம் என்று தெளிவாக வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஜனாதிபதி பதவியேற்று ஒரு வருடத்துக்கும் மேலாகி விட்ட நிலையில், அரசியல் கைதிகள் யார் என்றே கேட்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

பயங்கரவாத தடுப்பு சட்டத்தை நீக்குவோம் என்று கூறியவர்கள், இன்று அதற்குப் பதிலாக புதிய சட்டங்களை கொண்டுவர முயற்சிக்கிறார்கள். இப்படியான சூழ்நிலையில்தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

நேற்றைய தினம் கூட, வவுனியா வடக்கின் நெடுங்கேணி பகுதியில், எங்களுடைய மண்ணைப் பாதுகாப்பதற்காக ஒரு பாரிய மக்கள் எழுச்சி போராட்டம் நடைபெற்றது. நீங்கள் “சுதந்திரம் கிடைத்தது” என்று கூறும் அதே நாளிலிருந்து, தமிழ் மக்களுக்கு தங்களுடைய நிலங்களைப் பாதுகாப்பதே பிரதான கடமையாகி விட்டது.

மணலாறு (பின்னர் பெயர் மாற்றம் செய்யப்பட்டது) போன்ற பகுதிகளில், தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்த நிலங்களில் குடியேற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. குடிதண்ணீர் மற்றும் விவசாயத்திற்கான நீர் வழங்கல் என்ற பெயரில், வவுனியாவின் சிறுகுளங்கள் அழிக்கப்பட்டு, வவுனியா வடக்கிலிருந்து நீர் மாற்றப்பட்டு, பெரும்பான்மை சமூகத்தின் குடியேற்றங்களை வளர்ப்பதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

இது சமத்துவமா? வவுனியாவில் உள்ள தமிழ் விவசாயிகள் ஒரு போகமும் விவசாயம் செய்ய முடியாத நிலையில் இருக்க, பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த 4,000 பேருக்கு இரண்டு போகங்கள் விவசாயம் செய்ய நீர் வழங்கப்படுகிறது. இதுவே கடந்த காலங்களிலிருந்து தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட தொடர்ச்சியான ஏமாற்றங்களின் எடுத்துக்காட்டாகும்.

அதே நடைமுறைகளும், அதே துரோகம் செய்த செயல்களும் இன்றைய அரசாங்கத்தாலும் தொடரப்படுகின்றன. மகாவலி திட்டங்கள் என்ற பெயரில், மட்டக்களப்பு, வட மத்திய மாகாணம் உள்ளிட்ட பகுதிகளில் தமிழ் மக்களின் நிலங்கள் அபகரிக்கப்பட முயற்சிக்கப்பட்டுள்ளன.

76, 77 ஆண்டுகளாக “சுதந்திரம்” என்ற போர்வையில் தமிழ் மக்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்டு வருகின்றன. எங்களுடைய மக்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு கிடைக்கும் வரை, இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு உண்மையான சுதந்திரம் இல்லை.

அதனால், பெப்ரவரி 4ஆம் திகதி எங்களுக்குப் பொறுத்தவரை ஒரு சுதந்திர தினமாக அல்ல் ஒரு கரிநாளாகவே அமையும். – என்றார்.











# வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் நேற்று சுதந்திர தினக் கொண்டாட்டம்!

இலங்கையின் 78ஆவது தேசிய சுதந்திர தின விழா வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் நேற்று கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபைக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

காலை 7.59 மணியளவில் நிகழ்விடத்துக்கு வருகை தந்த வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன் சம்பிரதாயபூர்வமாக வரவேற்றார். அதனைத் தொடர்ந்து ஆளுநரால் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளால் தமிழ் மொழியிலும் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்களால் சிங்கள மொழியிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டதுடன், தொடர்ந்து நாட்டுக்காக உயிர்நீத்த வீரர்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன் பின்னர் சுதந்திர தினப் பேருரையை ஆளுநர் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய இசை, தேசிய மாணவர் படையணியின் அணிவகுப்பு மற்றும் கலாசார நிகழ்வுகள் விழாவை அலங்கரித்தன.

ஹாட்லிக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி, சாவகச்சேரி இந்து கல்லூரி மற்றும் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளின் பாண்ட் வாத்தியக் குழுவினர் இசையை வழங்கினர்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மற்றும் உடுவில் மகளிர் கல்லூரி தேசிய மாணவர் படையணியினரின் சீருடை அணிவகுப்பு மரியாதை இடம்பெற்றது.

ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி, தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாலயம் மற்றும் கல்லடி றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களின் சாரணிய அணிவகுப்பு மரியாதையும் நடைபெற்றது.

அத்துடன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்களால் இன்னியம் இசை அணிவகுப்பு நடத்தப்பட்டதுடன், நாட்டின் அனைத்து இனங்களையும் பிரதிநித்துவப்படுத்தும் வகையிலான டெனியா மற்றும் சிறிமுருகன் முன்பள்ளி மாணவர்களின் அணிவகுப்பு கண்காட்சியும் நடைபெற்றது.

மேலும் புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவர்களின் செம்பு நடனம், கோலாட்டம், சிரட்டை கும்மி மற்றும் மயில் நடனம் ஆகியனவும், லயா நாட்டியப் பள்ளி

தொடர்ச்சி▼





















# வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் நேற்று சுதந்திர தினக் கொண்டாட்டம்!

தொடர்ச்சி▲

மாணவர்களின் கரகாட்டம் மற்றும் ஒயிலாட்டம், வெலிஓயாவைச் சேர்ந்த ரன்சிலு கலைமன்றம் மற்றும் பரக்கும்பர மகாவித்தியாலய மாணவர்களின் கண்டிய நடன ஆற்றுகை, ஒஸ்மானிய கல்லூரி மாணவர்களின் கோலாட்டம் மற்றும் ரபான் ஆற்றுகை, சிவலீமன் சிலம்பம் கல்லூரி மாணவர்களின் சிலம்பாட்ட ஆற்றுகை, வெலிஓயா மதுரங்க கலாமன்றத்தின் நடன நிறுவன மாணவர்களின் சிங்கள நடனம் ஆகிய பலவண்ணக் கலை நிகழ்ச்சிகள் அரங்கேறின.

இவ்விழாவில் சர்வமதத் தலைவர்கள், யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் கொன்சியூலர் ஜெனரல் சாய் முரளி, யாழ்ப்பாணப் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கே.ரி.பி.டி.சில்வா, வன்னி பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி, கடற்படையின் வடபிராந்திய கட்டளைத் தளபதி, வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், விமானப் படையின் குறூப் கப்டன், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர், மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் தலைவர், வடக்கு மாகாண திணைக்களத் தலைவர்கள், அரச உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் நிறைவாக ஆளுநரால் தென்னம் பிள்ளைகள் வழங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, பிரதம செயலாளரின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.




















# காலி சிறைச்சாலையில் அதிரடி சோதனை; தொலைபேசிகள், போதைப்பொருள் மீட்பு

காலி சிறைச்சாலையில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது, பெருமளவிலான கையடக்கத் தொலைபேசிகள், சிம் அட்டைகள் மற்றும் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறைச்சாலையிலுள்ள நான்கு சிறைக்கூடங்களில் இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, எவரும் உரிமை கோராத நிலையில் காணப்பட்ட 19 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் 11 சிம் அட்டைகள் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன், சிறைக்கூடங்களில் இருந்து 58 சிறிய ஹெரோயின் பொதிகளும், ஹெரோயின் என சந்தேகிக்கப்படும் மற்றுமொரு பொதியும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட பொருள்கள் அனைத்தும் சிறைச்சாலை அத்தியட்சகரின் பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளுக்காக போதைப் பொருள் பொதிகள் காலி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில் சிறைச்சாலைகள் தலைமையகத்தின் அறிவுறுத்தலின் பேரில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கோட்டை மத்திய பஸ் நிலையத்தின் புனரமைப்பு தொடர்பில் கலந்தாய்வு



கொழும்பு கோட்டை மத்திய பஸ் நிலையத்தைப் புனரமைக்கும் பணிகளின் முன்னேற்றம் குறித்த உயர்மட்டக் கலந்தாய்வுக் கூட்டம், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா (ஓய்வு) தலைமையில் நேற்று முன்தினம் பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்றது.

இலங்கை விமானப்படையினால் முன்னெடுக்கப்படும் இப்புனரமைப்புத் திட்டமானது, பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்துதல், செயற்பாட்டுத் திறனை அதிகரித்தல் மற்றும் தூய்மையான, பாதுகாப்பான சூழலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

கட்டுமானப் பணிகளின் தரம், காலக் கெடுவைப் பேணுதல் மற்றும் பொறியியல், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் தரநிலைகளை உறுதிப்படுத்துவது அவசியம் என பாதுகாப்புச் செயலாளர் வலியுறுத்தினார்.

இது ஒரு முக்கிய போக்குவரத்து மையம் என்பதால், பணிகள் நடைபெறும் வேளையில் பயணிகளுக்கான சேவைக்கு எவ்வித இடையூறும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளுமாறு அவர் அறிவுறுத்தினார்.

விமானப்படையின் கட்டுமானப் பொறியியல் பணிப்பாளர் நாயகம் எயார் வைஸ் மார்ஷல் வஜிர சேனாதீர, திட்டத்தின் தற்போதைய நிலை மற்றும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து விளக்கமளித்தார்.

இக்கூட்டத்தில் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் பந்து எதிரிசிங்க, இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர், பொலிஸ் உயரதிகாரிகள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை உள்ளிட்ட பல திணைக்களங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருப்பதை பிக்குகளுக்கு உணர்த்தி இருக்கும் என்று நினைக்கிறேன்.

இப்போது அவர்களின் முன்னிலையில் இந்த வழக்கு தொடர்பில் மூன்று மார்க்கங்கள்தான் உள்ளன.

ஏற்கனவே இந்த வழக்கு திருகோணமலை நீதிவான் நீதிமன்றுக்கு வந்த போது விடயத்தைக் கமுக்கமாக முடிப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு நீதிவான் மென்மையான ஆலோசனையொன்றை முன் வைத்தார்.

கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவள அபிவிருத்தித் திணைக்களம் இந்த விடயத்தை ஒட்டி முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டு, சம்பந்தப்பட்ட புத்தர் சிலைக்கு அமைக்கப்பட்ட கொட்டகையை அன்றே அகற்றுவதற்கு இணங்கினால், சிறிய அபராதத் தொகையோடு வழக்கை முடிவுக்குக் கொண்டு வரலாம் என்பதுதான் நீதிவானின் சுமுகத் தீர்வு யோசனையாக மன்றில் கோடி காட்டப்பட்டது. ஆனால் பிக்குமார் மற்றும் புத்தர் சிலை வைத்த தரப்பினர் அதற்கு இணங்கவில்லை. சட்டப்போராட்டம் நடத்தி தாங்கள் நீதியை நிலை நாட்டுவார்கள் என்று அவர்கள் தரப்பு சட்டத்தரணிகள் கூறி வந்தனர்.

ஆனால் அந்த அணுகுமுறை பிக்குமார் உட்பட பத்துப் பேரையும் நீண்ட காலம் விளக்கமறியலில் சிக்க வைக்கும் பொறி போலாகிவிட்டது.

இப்போதைய நிலையில் அவர்களுக்கு மூன்று மார்க்கங்கள் உள்ளன.

ஒன்று – திருகோணமலை நீதிவான் நீதிமன்றம் வழங்கிய விளக்க மறியல் உத்தரவுக்கு எதிரான ரிட் மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்து, திருகோணமலை நீதிவானின் உத்தரவைத் தள்ளிபடி செய்ய இன்னொரு தடவை உயர்நீதிமன்றத்திலும் முயற்சித்துப் பார்க்கலாம். ஆனால் அதிலும் சாதகமான முடிவு கிடைப்பதற்கான சட்ட வாய்ப்புகள் பிரகாசமாகத் தென்படுவதாகத் தெரியவில்லை.

அடுத்தது – திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் தொடுக்கப்பட்டுள்ள வழக்கை இறுதிவரை எதிர்கொண்டு சட்டப் போராட்டம் நடத்துவது. இந்த வழக்கு வழமை போல உடனடியாக முடிவுக்கு வரும் என்று கூறுவதற்கான வாய்ப்புகள் தெரியவில்லை. அத்தோடு வழக்கிலும் வெற்றி கொள்ளலாம் என்ற நிலைமை சம்பந்தப்பட்ட எதிராளிகளுக்கு முழுமையாக இருப்பதாகவும் தெரியவில்லை. ஆகவே இந்த மார்க்கத்தில் போனால் நீண்ட காலம் விளக்கமறியல் தடுப்பும் முடிவில் சிறை வாசமும் அனுபவிக்கக் கூடிய ஆபத்துக்கும் வாய்ப்புண்டு. ஆகவே இந்த இரண்டாவது மார்க்கத்தை கையில் எடுத்தால் தொடர்ந்து நீண்ட காலம் விளக்க மறியலில் இருந்தபடி சட்டப் போராட்டத்தை தொடர வேண்டி இருக்கும்.

மூன்றாவது வழி – ஏற்கனவே திருகோணமலை நீதிவான் நீதிமன்றம் கோடி காட்டிய வழிமுறைப்படி குற்றத்தை ஏற்றுக் கொண்டு, குறைந்த அளவு தண்டனையோடு சிக்கலில் இருந்து விலகிக் கொள்வது.

சம்பந்தப்பட்ட தரப்புகள் இதில் எதைத் தேர்ந்தெடுக்க போகின்றன என்பது தெரியவில்லை.

ஆயினும் புத்தர் சிலை வைக்கும் விடயங்களில் இப்படி அடாவடித்தனமாக தொடர்ந்து செயல்படுவதற்கு இடம் அளிக்கப்பட மாட்டாது என்பது சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு புதிய அரசினால் வெளிப்படையாக உணர்த்தப்பட்டிருப்பதாகவே தோன்றுகின்றது.

கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவள அபிவிருத்தித் திணைக்களம் காட்டிய நடுநிலை செயற்போக்கும் துணிச்சலும் இலங்கை அரசாங்கத்தின் பிற அங்கங்களுக்கும் வருமானால் தங்கள் மேலாதிக்கத்தை காட்டுவதற்கான அடையாளமாக பஞ்சசீலம் போதித்த புத்தரைப் பயன்படுத்தும் கீழ்த்தரமான போக்கு முடிவுக்கு வரும் என்று கருதலாம்.

---

## அடக்குமுறைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்த அரச தரப்பினர் பல்வேறு வாக்குறுதிகளைவழங்கியேமக்களின்ஆணையைக் கோரி இருந்தது. அதன் பிரகாரம் அவர்களின் வாக்குறுதிக்கமையவே மக்கள் அவர்களுக்கு ஆணை வழங்கி இருக்கின்றார்கள். ஆனால் அரசு, மக்களுக்கு வழங்கிய முக்கியமான வாக்குறுதிகளை மறந்து செயற்பட்டு வருகின்றது.

இதனால் அரசு தொடர்பில் மக்களுக்கு இருந்து வந்த நல்லெண்ணம் குறையடைய ஆரம்பித்துள்ளது. அதனால் அரசு அந்த நிலைமையை மாற்றியமைப்பதற்காக முன்னாள் ஆட்சியாளர்கள் மற்றும் அவர்களது உறவினர்களை விசாரணைக்காகக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்க ஆரம்பித்திருக்கின்றது.

ஊழல், மோசடியுடன் யாராவது சம்பந்தப்பட்டிருந்தால் அவர்களை விசாரணைக்கு அழைப்பதற்கு நாங்கள் எதிர்ப்பில்லை. ஆனால் மக்கள் இதற்கு மாத்திரம் அரசுக்கு ஆணை வழங்கவில்லை. மக்கள் ஆணை வழங்கிய அனைத்து விடயங்களும் இன்று மறுபக்கத்துக்குத் திரும்பியுள்ளன.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதாக இந்த அரச தரப்பினர் தெரிவித்தார்கள். சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை மாற்றுவதாகத் தெரிவித்தார்கள். இவை எதுவும் இடம்பெறவில்லை. அதேபோன்று அரசின் சுயாதீனத்தன்மை, வெளிப்படைத்தன்மை, நியமனங்கள் எதுவும் அவர்கள் தெரிவித்தது போல் செயற்படவில்லை.

அதனால் அரசின் இயலாமையை மறைத்துக்கொள்வதற்கே தற்போது, ஒருசிலரை குற்றப் புலனாய்வுக்கு அழைத்து வருகின்றார்கள்.

இந்த அரசிம் தற்போது அடக்குமுறை மாத்திரமே எஞ்சி இருக்கின்றது. அரசு ஒன்று அடக்குமுறையை மேற்கொள்ளத் தீர்மானிப்பது என்பது அது அந்த அரசின் பலவீனமாகும். இந்த அரசும் தற்போது அதனையே கையில் எடுத்திருக்கின்றது.

அதேநேரம் இன்று நாடுபூராகவும் அரச வைத்தியசாலைகளில் வைத்தியர்களின் தொழிற்சங்க நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. வைத்தியர்களின் கோரிக்கைகளில் நியாயம் இருக்கின்றது. அதனால் அரசு அவர்களுடன் கலந்துரையாடி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.” – என்றார்.

---

## செயற்பாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதனை அவர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

“தற்போது நான் எந்தவொரு கட்சியிலும் அங்கம் வகிக்கவில்லை. அரசியல் நடவடிக்கையில் பங்கேற்கவும் இல்லை. எவரேனும் நாட்டுக்கு நன்மை செய்தால் அது தொடர்பான நிகழ்வுகளில் பங்கேற்று வருகின்றேன்.” – என்றும் ஊடகங்களிடம் அவர் கூறியுள்ளார்.

சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஊடாக அரசியல் பயணத்தை முன்னெடுத்தவர் மைத்திரிபால சிறிசேன.

இவர் 2014 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகக் களமிறங்கி வெற்றி பெற்றவர்.

ஜனாதிபதியாகப் பதவி வகித்த பின்னரும் 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார்.

அரகலயவின் பின்னர் அரசியல் ரீதியில் மைத்திரி அநாதையாக்கப்பட்டுள்ளார். கடந்த பொதுத்தேர்தலில் அவரது மகன் போட்டியிட்டிருந்தாலும் வெற்றி பெறவில்லை.

---

## நம்பிக்கையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வருகின்றது.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

இலங்கையின் 78ஆவது சுதந்திர தின நிகழ்வு நேற்று வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபைக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“வடக்கு மாகாணத்தில் பல தசாப்தங்களாக விடுவிக்கப்படாமல் இருந்த காணிகள் எவ்வித அரசியல் நிபந்தனையும் இன்றி உரிமையாளர்களிடம் விடுவிக்கப்படுவது நல்லாட்சிக்கான சிறந்த சான்றாகும்.

அண்மையில் ஏற்பட்ட ‘டித்வா’ சூறாவளிப் பேரனர்த்தத்தின் போது வடக்கு மாகாண சபைக்குப் போதிய நிதியை மத்திய அரசு உடனடியாக விடுவித்திருந்தாலும், நாம் தனித்து விடப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் எமது மாகாணத்துக்கு வந்த பல நல்ல அபிவிருத்தித் திட்டங்களை, அவை மத்திய அரசிடமிருந்து வருகின்றன என்பதற்காகவோ அல்லது அரசியல் காரணங்களுக்காகவோ நாம் எதிர்த்திருக்கின்றோம் அல்லது சந்தேகக் கண் கொண்டு பார்த்திருக்கின்றோம். ‘எதிர்ப்பதுதான் அரசியல்’ என்ற ஒரு பழமைவாத அரசியல் கலாசாரம் இங்கு வேரூன்றியிருப்பதை நாம் மறுக்க முடியாது.

ஆனால், இந்த மனப்பாங்கு எமது இளைஞர்களின் எதிர்காலத்தைப் பாதிப்பதை நாம் சிந்திக்க வேண்டும். அபிவிருத்தித் திட்டங்கள் வரும்போது, அவற்றை அரசியல் கண்ணாடி கொண்டு பார்க்காமல், ‘இதனால் எமது மக்களுக்கு என்ன நன்மை?’, ‘எமது இளைஞர்களுக்கு எவ்வளவு வேலைவாய்ப்பு கிடைக்கும்?’ என்ற வளர்ச்சிக்கான கண்ணோட்டத்தில் பார்க்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

உலகம் வேகமாக இயங்கிக்கொண்டிருக்கின்றது. நாம் இன்னும் பழைய கோஷங்களை வைத்துக்கொண்டு வரும் வாய்ப்புகளைத் தட்டிக்கழித்தால், எமது அடுத்த சந்ததி தொழில் தேடி வெளிநாடுகளுக்கும் வெளி மாவட்டங்களுக்கும் செல்லும் நிலை மாறாது. எனவே, மக்களின் நன்மை கருதி வரும் திட்டங்களை அரவணைத்து, அவற்றை வெற்றிபெறச் செய்வதே விவேகமான அரசியலாகும். ஆக்கபூர்வமான விமர்சனங்கள் தேவை ஆனால் கண்மூடித்தனமான எதிர்ப்புகள் எமது வளர்ச்சியை நாமே தடுப்பதற்குச் சமமாகும்.” – என்றார்.



# வவுனியா மாவட்ட சாரண சங்கத்தின் ஏற்பாட்டில் சுதந்திர தின நிகழ்வும் சாரணர்களின் பேரணியும்

இலங்கையின் 78 ஆவது சுதந்திர தினம் நாடளாவிய ரீதியில் நேற்று அனுஷ்டிக்கப்பட்ட நிலையில், வவுனியா மாவட்ட சாரணர்களால், வவுனியா மாவட்ட சாரண சங்க அலுவலகத்தில் அது அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வு மாவட்ட ஆணையாளரின் தலைமையில் இடம்பெற்றது.

மேலும் சுதந்திர தினத்தினை முன்னிட்டு வவுனியா மாவட்ட சாரணர்கள் வவுனியா மாவட்ட சாரண சங்கத்தில் இருந்து – மாவட்ட செயலகம் – குருமன் காடு– வைரவபுளியங்குளம் – மணிக்கூடு கோபுரம் – பஜார் வீதி – ஹொரப்பாத் தனை வீதி – குடியிருப்பு – மாவட்ட சாரண சங்கம் வரை சாரணர் விழிப்புணர்வு பேரணி ஒன்றும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சாரணர் சங்கத்தின் பொருளாளர், உதவி மாவட்ட ஆணையாளர்கள், பாடசாலை சாரணர் தலைவர்கள், பொறுப்பாசிரியர்கள், சாரணர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.










# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஹர்ஷவின் கனவு!

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் நேற்றைய சுதந்திர தின உரையில் ஒரு முக்கிய விடயம் புதிதாக வெளிப்பட்டிருப்பதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா சுட்டிக் காட்டி இருக்கிறார்.

புதிதாக அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி, தான் இப்போது அதிகாரப் பொறுப்பை ஏற்றதும், கடந்த 76 ஆண்டுகளாக இந்த நாட்டை ஆண்ட அரசுகளின் ஆட்சிகள் பெரும் சாபக்கேடு என்றும் இவ்வளவு காலமும் சாபக்கேடான நிலைமையே தொடர்ந்து வந்தது என்றும் தொடர்ச்சியாகப் பிரசாரப்படுத்தி வந்தது.

அதிலிருந்து சற்று மாறுபட்டு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நேற்று சுதந்திர தின உரையை நிகழ்த்தி இருக்கிறார் என்று ஹர்ஷ டி சில்வா தெரிவிக்கிறார்.

இந்த ஆண்டு சுதந்திர தின விழாவில் ஜனாதிபதி ஆற்றிய உரையை சிறப்பு கவனம் செலுத்திய ஹர்ஷ டி சில்வா, இதற்கு முன்பு சொல்லப்படாத ஒன்றை ஜனாதிபதி குறிப்பிட்டார் என்கிறார்.

“75 ஆண்டுகளாக நாட்டில் நல்லதும் கெட்டதும் நடந்தேறி வருகிறது” என்று கூறி, 75 ஆண்டுகால சாபம் என்ற கருத்தை ஜனாதிபதி தனது இந்த உரையில் நிராகரித்தார் என்பதை ஹர்ஷ டி சில்வா வலியுறுத்தினார்.

“எல்லாமே கெட்டவை அல்ல என்றும்நாங்கள்சொல்லிவருகிறோம். வரலாற்றில் நடந்த நல்ல விஷயங்களை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்” என்று அவர் குறிப்பிட்டார்.

78 ஆண்டுகால சுதந்திர வரலாற்றில் அடையப்பட்ட வலுவான மற்றும் நியாயமான சாதனைகளை முன்னோக்கி எடுத்துச் செல்ல வேண்டும் என்று கூறிய ஹர்ஷ டி சில்வா, சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து ஒரு வலுவான நாடாக முன்னேற வேண்டும் என்பதே தனது விருப்பம் என்றும் கூறினார்.

ஆனால் அங்குதான் பிரச்சினையே - தீராத சிக்கலின் அடிப்படையே - பொதிந்து கிடக்கின்றது.

நாட்டின் சிறுபான்மையினரை, அவர்களின் நியாயமான வரலாற்று அபிலாசைகளை, ஆதங்கங்களை, எதிர்பார்ப்புகளை, உள்வாங்கி நியாயம் செய்வதன் மூலம் கௌரவமான - ஒன்றிணைந்த - நாட்டைக் கட்டி எழுப்புவதில் தேசிய மக்கள் சக்தி உட்பட இதுவரை அதிகாரத்தில் இருந்த எந்த பௌத்த - சிங்கள ஆட்சி பீடத்திற்கும் திடசங்கற்பமோ, பற்றுறுதியோ இருக்கவில்லை. இப்போதைய ஆட்சியிலும் அந்த நீதி செய்யும் - நியாயத்தை நிலைநாட்டும் - சிந்தனைப் போக்கே இல்லை என்பது தொடர்ந்து வெளிப்பட்டு வருகிறது.

ஆகவே நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கூறுகின்ற சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை ஒன்றிணைத்து ஒரு வலுவானநாடாகமுன்னேறவேண்டும் என்ற கனவு தொடர்ந்து பகல் கனவாகவே நீடிக்கப் போகின்றது. அதை மாற்றியமைப்பதற்கான நீதியான அரசியல் தலைமைத்துவம் இன்னமும் தென்னிலங்கையில் வரவே இல்லை. பேரினவாத அடிப்படையில் சிறுமைத்தனமான அரசியல் செய்யும் தலைமைகள்தான் தொடர்ந்து தென்னிலங்கையில் நீடிக்கின்றன.



# நிலத்தில் உரிமை கிட்டும் போதே சுதந்திரம் அதுவரையில் தமிழருக்கு இது கரிநாள்தான்

## மட்டக்களப்பில் வழிமறிக்கப்பட்ட பேரணியை ஒட்டி வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் தெரிவிப்பு

(வாலகிருஸ்ணா)

தமிழர்கள் தங்களது நிலத்தில் உரிமையுடன் வாழ்வதற்கான உரிமை எப்போது கிடைக்குமோ அப்போதுதான் எமக்கு சுதந்திர நாள். அதுவரைக்கும் இது தமிழர்களுக்கு கரிநாளாகத்தான் பிரகடனம் செய்து நாங்கள் செயல்படுவோம் என மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி திருமதி அ.அமலநாயகி தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்பில் நடைபெற்ற கரிநாள் போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

ஒரு போராட்டத்தைக் கூட சுதந்திரமாக நடாத்தமுடியாத எங்களுக்கு இந்த நாட்டில் ஒவ்வொரு தேசிய சுதந்திர தினமும் கரிநாள்தான் என்றார் அவர்.

இலங்கையின் 78 ஆவது சுதந்திர தினத்தினை முன்னிட்டு கரிநாளாகப் பிரகடனப்படுத்தி பல்வேறு தடைகளுக்கு மத்தியில் கிழக்கு மாகாண வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கத்தினர் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து மாபெரும் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு கல்லடி பாலத்திலிருந்து மட்டக்களப்பு காந்திபூங்காவரையில் ஊர்வலம் செல்ல ஆயத்தமான நிலையில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு ஊர்வலத்தினை தடுப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. காந்திபூங்காவில் தேசிய சுதந்திர தின நிகழ்வுகள் நடைபெறுவதன் காரணமாக அங்கு செல்லமுடியாது என பொலிஸார் தடைகளை ஏற்படுத்தினர்.

எனினும் தமது போராட்டம் வழமையாக காந்திபூங்காவில் நிறைவடைவதனால் அங்கு செல்வதற்கு அனுமதி வழங்குமாறு காணாமல்போனவர்களின் உறவினர்களினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

எனினும் அங்குசெல்வதற்கு அனுமதிக்கமுடியாது என பொலிஸார் தெரிவித்த நிலையில் கல்லடி பாலத்தில் ஆரம்பித்து தனியார் பஸ் நிலையத்தில் போராட்டத்தினை முடிப்பது என பொலிஸாரிடம் தெரிவித்ததையடுத்து போராட்டம் நடாத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு,அம்பாறை,திருகோணமலை மாவட்டங்களிலிருந்து வருகைதந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட வலிந்து காணாமல்ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் உறவினர்கள்,பொது அமைப்புகள்,அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்முகொண்டனர்.

இதன்போது கல்லடி பாலத்திலிருந்து பல்வேறு கோசங்களுடன் பேரணியானது நினைவு ஊர்தியுடன் பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு திருகோணமலைவீதியுடாகமட்டக்களப்புநகர்நோக்கி சென்றபோது வெள்ளைப்பாலம் அருகில் பொலிஸாரினால் வீதி தடைகள் ஏற்படுத்தப்பட்டு போராட்டக்காரர்கள் மறிக்கப்பட்டு புதுப்பாலம் ஊடாக பேரணியானது செல்லுமாறு பணிக்கப்பட்டது.

எனினும் தாங்கள் தமது போராட்டத்தினை நகர் ஊடாகவே செல்வோம் என வலிந்துகாணாமல்ஆக்கப்பட்ட உறவுகள் மற்றும் சிவில்சமூக பிரதிநிதிகள் பொலிஸாருடன் முரண்பட்டு தள்ளுப்பட்ட நிலையில் பொலிஸார் அப்பகுதி ஊடாக செல்ல அனுமதிக்காத நிலையில் வெள்ளைப்பாலத்திற்கு அருகில் போராட்டம் மட்டுப்படுத்தப்பட்டு அவ்விடத்தில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து கிழக்கு பல்கலைகழக மாணவர்களினால் கரிநாள் பிரகடனம் வாசிக்கப்பட்டு போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

“காணமல்ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிவேண்டும்”, “வடக்கு, கிழக்கின் படுகொலைகளுக்கு நீதி வேண்டும், “திட்டமிட்ட நில அபகரிப்புகளை நிறுத்து”, “தமிழர்களை அடக்கியொடுக்குவதை நிறுத்து“, “ஊடகவியலாளர்களின் படுகொலைக்கு நீதிகொடு”, “காணமலாக்கப்பட்டவர்கள் எங்கே?”, “திட்டமிட்ட குடியேற்றங்களை நிறுத்து!” – போன்ற பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டன.

கோட்டாபயவின் ஆட்சிக்காலத்தில் கூட இல்லாத நெருக்கடிகள் இன்றைய அநுர ஆட்சிக்காலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்ச் இங்கு கருத்து தெரிவித்தவர்கள் குறிப்பிட்டனர்.

# 78 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 9,158 இராணுவ வீரர்களுக்கு பதவியுயர்வு

78 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 9,158 இராணுவ வீரர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் ஆணையற்ற அதிகாரிகளுக்கு இவ்வாறு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது.

1,440 சாதாரண சிப்பாய்கள் லான்ஸ் கோப்ரல் தரத்திற்கும் 2,339 லான்ஸ் கோப்ரல்கள் கோப்ரல் தரத்திற்கும் தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.






# ஹட்டனில் நேற்று மக்கள் மாநாடு

(பொகவந்தலாவ: எஸ்.சதீஸ்)

“மலையகத் தமிழ் மக்களே! வெல்லும் வரை போராடுவோம்!“ எனும் தொனிப் பொருளின் கீழ் காணி – வீட்டுரிமை, மாதசம்பளம், குடியுரிமை உள்ளிட்ட உரிமைகளை வென்றெடுக்கும் மாநாட்டையும் மாநாட்டு பிரகடனம் வெளியீட்டு வைப்பு நிகழ்வையுன் நேற்று புதன்கிழமை ஹட்டன் கிருஸ்ணபவான் மண்டபத்தில் சமுக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பு, சம உரிமை இயக்கம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

இதன்போது காணி – வீட்டுரிமை, மாதச் சம்பளம், குடியுரிமை உள்ளிட்ட உரிமைக்கான பிரகடனமும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

பெண்கள் இயக்கத்தின் நிரோஷா குருகே, தொழிலாளர் போராட்ட மையத்தின் சுகதா நந்த, மலையகத் தமிழ்ப் பெண்களின் சார்பில் ஞானதேவி, மலைநாட்டு மக்களின் நில உரிமைக்கான இயக்கத்தின் கணேஷ் கணேசமூர்த்தி, சம உரிமை இயக்கத்தின் அழைப்பாளர் இந்திரானந்த, மாநாட்டை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் மற்றும் அமைப்புகளின் சார்பில் மகேந்திரன், பெண்கள் விடுதலைக்கான இயக்கத்தின் சார்பில் பிரசாதினி, மக்கள் போராட்ட இயக்கத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே, சமூக செயற்பாட்டாளர்கள், சட்டதரணிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.






# பாதிப்புற்ற வீடுகளுக்குத் திரும்ப வேண்டிய கட்டாயத்தில் சாமி மலை நூர்தி பிரிவு மக்கள்

(மஸ்கெலியா நிருபர்)

கடந்த டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி ஏற்பட்ட டித்வா புயலின் காரணமாக சாமி மலை ஸ்டொக்கோம் தோட்ட நூத்தி பிரிவில் 65 குடும்பம் நூத்தி பாரதி வித்தியாலயத்தில் தஞ்சம் புகுந்தன. அந்தக் குடும்பங்கள் மீண்டும் ஆபத்து நிலையில் உள்ள தங்களின் வீடுகளுக்குத் திரும்ப வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

டித்வா புயலின் காரணமாக மஸ்கெலியாபிரதேசசபைக்குஉட்பட்டபகுதிகளில் உள்ள சாமி மலை ஸ்டொக்கோம் தோட்ட நூத்தி பிரிவில் 65 குடும்பத்தைச் சேர்ந்த 325 குடும்ப உறுப்பினர்கள் நூத்தி பாரதி வித்தியாலயத்தில் தஞ்சம் புகுந்தனர்.

சுமார் ஒரு மாதத்திற்கு மேல் அங்கு தங்கி இருந்த இவர்கள் பாடசாலை ஆரம்பிக்க பட வேண்டும் என்பதால் பாடசாலை கட்டடத்தை விட்டு வெளியே வர வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. அவர்கள் தங்கி இருந்த இல்லங்களுக்கு திரும்ப வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களின் இல்லங்களில் பாரிய அளவில் வெடிப்பு ஏற்பட்டு உள்ளது. அந்த குடியிருப்பு பகுதிகளில் நீர் ஓடைகள் மற்றும் சாமி மலை ஓயா செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

பாதிக்கப்பட்ட மக்கள் மாற்று காணிகள், மாற்று இல்லங்களைப் பாதுகாப்பான இடத்தில் அமைத்துத் தர வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கல் மற்றும் ஜனாதிபதி அனுரகுமார திஸநாயக்க ஆகியோர் முன் வர வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றனர்.

# 2025 இல் GovPay செயலி ஊடாக 46,000 பேர் அபராதம் செலுத்தினர்

GovPay செயலி ஊடாக போக்குவரத்து அபராதங்களைச் செலுத்தும் சாரதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் வெளியிட்டுள்ள தரவுகளின் படி, 2025 ஆம் ஆண்டில் சுமார் 46,635 சாரதிகள் GovPay செயலி மூலம் தங்களது போக்குவரத்து அபராதங்களைச் செலுத்தியுள்ளனர்.

இந்த ஆண்டில் ஜனவரி 1 முதல் ஜனவரி 24 வரை மாத்திரம் 11,715 சாரதிகள் இந்த செயலியைப் பயன்படுத்தியுள்ளனர்.

இந்த கொடுப்பனவு முறையில், அதிவேக நெடுஞ்சாலை போக்குவரத்துப் பிரிவினாலேயே அதிகளவிலான அபராதப் பணம் அறவிடப்பட்டுள்ளதாக பொலிஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

டிஜிட்டல் முறைமையிலான இத்த கையகொடுப்பனவுகள்சாரதிகளுக்குநேர விரயத்தைக் குறைப்பதுடன், அபராதங்களைச் செலுத்தும் நடைமுறையை மேலும் எளிதாக்கியுள்ளன.

# ஹெரோயினுடன் சந்தேகநபர் கைது



03 கிலோ 18 கிராம் ஹெரோயினுடன் சந்தேகநபர் கிரிபத்கொடை வைத்தியசாலை வீதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

களனி பிராந்திய குற்ற விசாரணை பணியகத்தின் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரின் மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கிரிபத்கொடை பகுதியைச் சேர்ந்த 34 வயதான சந்தேகநபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் வெளியான தகவல்களுக்கு அமைய கட்டுநாயக்க 18 ஆம் மைல்கல் பகுதியிலுள்ள ஹோட்டலொன்றில் தங்கியிருந்த 32 வயதான தாய்லாந்து பிரஜை கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




# பிரித்தானியாவில் நேற்று கரிநாள் போராட்டம்

(பா.சதீசன், பூ.லின்ரன்)

இலங்கையின் 78 ஆவது சுதந்திர தினம் தமிழர்களுக்கு கரிநாள் எனக் கூறி பிரித்தானியாவில் நேற்றைய தினம் போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

தமிழீழ சுயநிர்ணய அமைப்பினரின் ஏற்பாட்டில், தமிழர்களின் தன்னாட்சிக்கான உரிமைக்குரலாகவும், இலங்கையின் சுதந்திர தினம் தமிழர்களுக்கு கரிநாளாகும் என்பதை வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

லண்டனில் அமைந்துள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகம் முன்பாக

தொடர்ச்சி▼












# பிரித்தானியாவில் நேற்று கரிநாள் போராட்டம்

தொடர்ச்சி▲

நேற்றுக் காலை 11 மணியளவில் இந்தப் போராட்டம் ஆரம்பமானது. இதில் லண்டனில் வாழும் புலம்பெயர் தமிழர்கள், லண்டன் மக்கள், இளைஞர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு, இலங்கை அரசின் தமிழர்களுக்கு எதிரானநடவடிக்கைகளை கண்டித்தனர்.

போராட்டத்தின் போது, தமிழர்களின் அரசியல் உரிமைகள், தன்னாட்சி, மனித உரிமை மீறல்கள் குறித்து கோஷங்கள் எழுப்பப்பட்டன .சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்க வேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டது.
















# தெவ்னி மோரி புத்த பெருமானின் சின்னங்களை ஜனாதிபதி வழிபட்டார்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தின் போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் விளைவாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் தலையீட்டின் கீழ் இந்திய அரசாங்கத்தின் முழு அனுசரணையுடன் இலங்கைக்குக்கொண்டுவரப்பட்ட“புத்தபெருமானின் புனித சின்னங்கள்” தரிசனத்தின் ஆரம்ப நிகழ்வைக் குறிக்கும் வகையில் புத்த பெருமானின் புனித சின்னங்களுக்கு நேற்று பிற்பகல் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, முதல் மலர் அஞ்சலி செலுத்தி வழிபட்டார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்த இடமான குஜராத்தின் அரவல்லி மாவட்டத்தில் உள்ள வரலாற்று சிறப்புமிக்கதெவ்னிமோரிதொல்பொருள் தளத்தில் உள்ள புத்த மடாலய வளாகத்தில் உள்ள ஸ்தூபியின் அருகே 1960 களில் நடத்தப்பட்ட தொல்பொருள் அகழ்வாராய்ச்சியின் போது இந்த புனிதச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

அந்த இடத்தில் இரண்டு புனிதச்சின்ன கலசங்கள் கண்டெடுக்கப்பட்டதுடன், அவற்றில் ஒன்றில் இந்த புத்த பெருமானின் புனித சின்னங்கள் கிடைத்தன. அங்கு காணப்பட்ட கலசத்தில் உள்ள கல்வெட்டு, “புத்த பெருமானின் புனிதச் சின்னங்கள் வைக்கப்பட்ட இடம்” என்று எழுதப்பட்டிருந்தமை, இவற்றின் புனிதத்தை மேலும் உறுதிப்படுத்தும் வலுவான சான்றாகும்.

இந்தியாவின் பரோதா அருங்காட்சியகத்தில் மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த இந்தப் புனிதச் சின்னங்கள், இதுவரை இந்தியாவிற்கு வெளியே கொண்டு செல்லப்படவில்லை என்பதுடன், இலங்கைமக்கள் இந்தபுனிதச்சின்னங்களை தங்கள் கண்களால் பார்த்து வழிபடும் வாய்ப்புக் கிடைத்திருப்பது இதுவே முதல் முறை ஆகும்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக புனிதச் சின்னங்கள் நேற்று பிற்பகல் இந்நாட்டிற்கு கொண்டு வரப்பட்டதுடன், அங்கு சிறப்பு மத வழிபாடுகள் நிறைவேற்றப்பட்டதன் பின்னர், புனிதச் சின்னங்கள் ஹுணுபிட்டி கங்காராம விகாரைக்கு கொண்டு செல்லப்பட்டன.

பின்னர், மகா சங்கத்தினரின் ஆசிர்வாதங்களுக்கு மத்தியில், புத்த பெருமானின்புனிதசின்னங்கள்தரிசனநிகழ்வை ஆரம்பித்து வைத்து, புனித சின்னங்களுக்கு ஜனாதிபதி முதல் மலர் அஞ்சலி செலுத்தி வழிபட்டார்.

அதன்படி, இன்று காலை முதல் பெப்ரவரி 11 ஆம் திதி வரை ஏழு நாட்கள், 24 மணி நேரமும், வரலாற்று சிறப்புமிக்க ஹுணுபிட்டி, கங்காராம விகாரையில் இந்த புனித சின்னங்களை இந்நாட்டு மக்கள் தங்கள் கண்களால் கண்டு வழிபடும் வாய்ப்புக் கிடைக்கவுள்ளதுடன், இதற்கு தேவையான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்திய – இலங்கை நட்பை வலுப்படுத்தும் இந்த சிறப்பு நிகழ்வைக் குறிக்கும் வகையில், குஜராத் மாநில ஆளுநர் கலாநிதி தேவ்விரத்திற்கு ஜனாதிபதி விசேட நினைவுப் பரிசையும் இதன்போது வழங்கினார்.

ஹுணுபிட்டி, கங்காராம விகாரையின் விகாராதிபதி வண. கலாநிதி கிரிந்தே அஸ்ஸஜி நாயக்க தேரர், சிறப்பு நினைவுப் பரிசொன்றையும் ஜனாதிபதிக்கு கையளித்தார்.

வரலாற்று சிறப்புமிக்க தெவ்னி மோரி புனித சின்னங்களை இந்நாட்டிற்கு தரிசனத்திற்காக கொண்டு வருதல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி மற்றும் இலங்கைக்கான இந்திய பதில் உயர் ஸ்தானிகர் சத்யாஞ்சல் பாண்டே ஆகியோருக்கு இடையே பரிமாற்றப்பட்டது.









# பருத்தித்துறை லூத்து மாதா வளாகத்தில் புகை விசிறும் செயற்பாடு முன்னெடுப்பு

பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட லூத்து மாதா கோவில் பெருவிழா கடந்த 02 ஆம் திகதி ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது.

இதன்போது அதிகளவு பொது மக்கள் ஒன்றுகூடும் வேளையில் டெங்கு பெருந்தொற்றில் இருந்து பாதுகாக்கும் பொருட்டு முற்பாதுகாப்பு நடவடிக்கையின் கீழ் நேற்று முந்தினம் செவ்வாய்க்கிழமை புகை விசிறும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

இந்த செயற்பாடானது பருத்தித்துறை நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போலினால் நகரசபை பொதுச்சுகாதார பரிசோதகர் ப. தினேஷ் ஊடாக பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் டெங்கு கட்டுப்பாட்டு பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# பருத்தித்துறை உணவகங்களில் லஞ்ச் சீற் தடை குறித்து கள ஆய்வு

பருத்தித்துறை நகரசபை ஆளுகைக்குட்பட்ட உணவகங்களில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டு லஞ்ச் சீற் தடை நடைமுறை குறித்து கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில் நகரசபை பொதுச்சுகாதார பரிசோதகர் ப.தினேஷ் இணைந்து நேற்று முந்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இந்த திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகர் பகுதியில் உள்ள உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்களுக்கு எவ்வித முன்னறிவும் இன்றி திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது லஞ்ச் சீற் தடை நடைமுறை பின்பற்றப்படுகின்றதா என்பது நேரில் பார்வையிடப்பட்டு தொடர்ந்தும் அதனை பின்பற்றுமாறு உணவக தரப்பினருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

கடந்த ஜனவரி 01 ஆம் திகதி முதல் உணவகங்கள், உணவு கையாளும் நிலையங்களிலும், பெப்ரவரி 01 முதல் திருமண மண்டபங்கள், வீடுகள், அரச அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் உள்ளிட்ட இடங்களில் இடம்பெறும் நிகழ்வுகளின் போதும் உணவு பரிமாற்றத்திற்கு லஞ்ச் சீற் பயன்படுத்த பருத்தித்துறை நகரசபையால் முற்றாக தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.









# லயன்ஸ் மாவட்ட 306 D3 இன் ‘தைப்பொங்கல் விழா 2026’

லயன்ஸ் சர்வதேச மாவட்ட 306 னு3 இன் ஏற்பாட்டில், தமிழர்களின் பாரம்பரிய அறுவடைத் திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு “தைப்பொங்கல் விழா 2026” கலை, கலாசார மற்றும் விளையாட்டு விழா வத்தளை சாகர மைதானத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

“அறுவடை மற்றும் ஒற்றுமையின் உணர்வைக் கொண்டாடுவோம்” எனும் தொனிப்பொருளில் அமைந்த இந்த விழாவில், மாவட்ட ஆளுநர் லயன் ஹியூ போஸ்கோ சில்வா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், அவருடன் அவரது பாரியார் லயன் கிரிஷாந்தி பெர்னாண்டோபுள்ளேவும் கௌரவ அதிதியாகக் கலந்துகொண்டார்.

விழாவின் ஆரம்பத்தில் பாரம்பரிய முறைப்படி மங்களகரமாக பொங்கல் இடப்பட்டு வழிபாடு நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில், மாணவர்களின் கண்கவர் நடனங்கள் தமிழர்களின் கலாசார விழுமியங்களை மிக அழகாகப் பறைசாற்றியதுடன் பார்வையாளர்களின் பாராட்டுக்களையும் பெற்றன.

நிகழ்வின் ஒரு அங்கமாக, சமூக சேவையில் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் சிறப்பு அதிதிகளுக்கு லயன்ஸ் மாவட்டத்தின் சார்பில் கௌரவிப்புக்கள் வழங்கப்பட்டன.

மேலும், உறுப்பினர்களிடையேயும் மாணவர்களிடையேயும் உற்சாகத்தையும் ஒற்றுமையையும் வளர்க்கும் நோக்கில் பல்வேறு பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் கோலாகலமாக நடத்தப்பட்டன.











# இராணுவத்தை அவமதித்துச் செயற்படும் இந்த அரசுக்கு எதிர்ப்புக் காட்ட வேண்டும்

## இப்படி சிங்கள மக்களிடம் சரத் வீரசேகர கோரிக்கை



"இலங்கையின் 78ஆவது சுதந்திர தினம் தேசியத்துக்காகக் கொண்டாடப் பட்டதா அல்லது புலம்பெயர் விடுதலைப் புலிகள் அமைப்புகளுக்காகக் கொண்டா டப்பட்டதா? சுதந்திர தின நிகழ்வில் போரை வெற்றி கொண்ட இராணுவத் தினர் பெருமைப்படுத்தப்படவில்லை. இந்த அரசு இராணுவத்துக்கு எதிரா கவே செயற்படுகின்றது. இதற்குப் பெரும் பான்மையின மக்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான சரத் வீரசே கர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததா வது:-

"இலங்கையை ஆக்கிரமிப்பதற்கு வரலாற்றுக் காலங்களில் மேற்கொண்ட ஆக்கிரமிப்புக்களைச் சிங்கள மன்னர்க ளும், தலைவர்களும் தோற்கடித்து நாட் டைப்பாதுகாத்தார்கள். 1948ஆம்ஆண்டு காலனித்துவ ஆட்சியில் இருந்து நாடு முழுமையாகச் சுதந்திரமடைந்தது.

நாட்டின் ஒற்றையாட்சிக்கு எதிரா கவே விடுதலைப்புலிகள் அமைப்பினர் ஆயுதமேந்திப் போராடினார்கள். 30 ஆண்டு கால போராட்டத்தின் பின்னர் 29 ஆயிரம் இராணுவத்தினர் தமது உயிரைத் தியாகம் செய்து நாட்டைப் பாதுகாத்தனர். 2009 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் அமைப்பு தோற்கடிக் கப்பட்டு நாடு இரண்டாவது தடவையாகச் சுதந்திரமடைந்தது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இராணுவத்தினருக்கும், தேசி யத்துக்கும் முன்னுரிமை வழங்கி நாட்டை ஆட்சி செய்தார். ஆனால் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க புலம்பெயர் தமிழ் அமைப்புகளுக்காகவே செயற்ப டுகின்றார்.

78 ஆவது சுதந்திர தினம் தேசியத்துக் காகக் கொண்டாடப்பட்டதா அல்லது புலம் பெயர் விடுதலைப்புலிகள் அமைப்பு களுக்காகக் கொண்டாடப்பட்டதா என்ற சந்தேகம் காணப்படுகின்றது.

2009 ஆம் ஆண்டு போரை முடிவுக் குக் கொண்டு வந்த போது பயன்படுத்தப் பட்ட பீரங்கிகள் மற்றும் போர் வாகனங் கள் சுதந்திர தினத்தில் காட்சிப்படுத்தப் படவில்லை.

அதேபோல் போரை முடிவுக்குக் கொண்டு வந்த இராணுவத்தினர் பெரு மைப்படுத்தப்படவில்லை. இந்த அரசு இராணுவத்துக்கு எதிராகவே செயற்படு கின்றது. இதற்குப் பெரும்பான்மை யின மக்கள் கடும் எதிர்ப்பை வெளிப் படுத்த வேண்டும்." – என்றார்.

# பருத்தித்துறை நகர சபையில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வு

இலங்கையின் 78 ஆவது சுதந்திர தின நிகழ்வு பருத் தித்துறை நகர சபையில் நேற்று நடைபெற்றது.

சபையின் செயலாளர் திருமதி தாரணி கஜரூபன் தேசியக் கொடியை ஏற்றி வைத்த பின்னர் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.







# நாடக நடிகர்களைப் போன்று செயற்பட்டு தமிழரை ஏமாற்ற முயலும் ஆட்சியாளர்கள்

## அடக்குமுறை வலுப்பதால் போராட்டங்களும் வலுக்கும் என்கிறார் ரவிகரன் எம்.பி.




(விஜயரத்தினம் சரவணன்)

ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு பாரிய உதவிகளைச் செய்கின்றார்கள் என நாடக நடிகர்களைப் போல் ஒருபுறம் செயற்பட்டுக்கொண்டு, மறுபுறம் தமிழ் மக்கள் மீது பல்வேறு வழிகளிலும் அடக்குமுறைகளைப் பிரையோகிக்கின்றனர் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

அந்த வகையில் ஆட்சியாளர்களின் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகள் வலுப்பெறுவதனாலேயே, அடக்குமுறைகளுக்கு எதிரான தமிழ் மக்களின் போராட்டங்களும் வலுப்பெறுகின்றன என நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சுதந்திரநாளினை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் பங்கேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

இலங்கையின் சுதந்திரநாள் தமிழர்களுக்கு கரிநாள் என்ற தொனிப்பொருளில் வருடாவருடம் இதேநாளில் எமது போராட்டம் தொடர்சியாக இடம்பெற்று வருகின்றது.

இலங்கையின் ஆட்சியாளர்கள் கடந்த 1948ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்களையும் இந்த நாட்டின் பிரஜைகளாகக் கருதி அதிகாரங்களை முறையாகப் பகிர்ந்தளித்திருந்தால் இவ்வாறான போராட்டங்களே இடம்பெற்றிருக்கா.

ஆனால் நாட்டின் ஆட்சியாளர்கள் அனைவரும் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப்பரப்புக்களில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை ஆக்கிரமிப்பது, திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்களை மேற்கொள்வது, பௌத்த விகாரைகள் மற்றும் புத்தர் சிலைகளை அமைப்பது, வடக்கு கிழக்கு கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரங்களைச் சூறையாடுவதென அனைத்து வழிகளிலும் தமிழ் மக்கள் மீது அடக்குமுறைகளைப் பிரையோகித்து வந்தனர்.

இவ்வாறுதமிழர்கள்மீதுஅடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டதற்கு எதிராக கடந்த காலங்களில் எம்மவர்கள் அகிம்சை வழியில் போராட்டங்களை மேற்கொண்டமையுடன், அந்தஅகிம்சைவழிப்போராட்டங்கள் பயனற்றுப்போன நிலையில் எமது இளையோர் ஆயுதங்களை ஏந்திப் போராடவேண்டிய நிலை ஏற்பட்டது.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒரு புள்ளி விவரத்தை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் 2,22,006 ஏக்கர் காணிகளே வன வளத் திணைக்களத்திடம் காணப்பட்டது. ஆனால் தற்போது வனவளத்திணைக் களத்திடம் 4,32,000 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்கள் உள்ளன.

குறிப்பாகத் தமிழர் தாயகப் பரப்புகளில் யுத்தம் மௌனிக்கப்பட்ட பிற்பாடு வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள்திணைக்களம், தொல்லியல்திணைக்களம், மகாவலி அதிகாரசபை, படையினர் உள்ளிட அரச இயந்திரங்களைப் பயன்படுத்தி மிகப்பாரிய அளவில் தமிழர்களின் பூர்வீக நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்யும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எமக்கு நிலமில்லையேல் எமக்கு எதுவுமில்லை. தமிழர்களின் நிலங்கள் இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்டால் அந்த நிலங்களுக்குரிய தமிழ் மக்கள் எங்கு போவது?

தமிழர்களுக்கு உதவிகளைச்செய்கின்றோமென ஆட்சியாளர்கள் ஒரு புறம் நாடக நடிகர்களைப் போல செயற்பட்டுக்கொண்டு, மறுபுறம் தமிழர்களின் காணிகளை அதே ஆட்சியாளர்கள் கபளீகரம் செய்கின்றனர்.

எமது கடற்பரப்புக்களில் எமது கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாக கடற்றொழில் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாத நிலையை ஆட்சியாளர்கள் ஏற்படுத்துகின்றனர்.

நில அபகரிப்புக்களின் மூலம் எமது தமிழ் மக்கள் சுதந்திரமாக விவசாயத்தை மேற்கொள்ள முடியாத நிலையை ஆட்சியாளர்கள் ஏற்படுத்துகின்றனர். கால்நடை வளர்ப்பாளர்களுக்குரிய மேய்ச்சல் தரைகளும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமையால் கால் நடைவளர்ப்பாளர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

சிறையில்வாடும்தமிழ்அரசியல்கைதிகளை விடுவிப்பது தொடர்பில் ஆட்சியாளர்கள் உரிய கவனஞ்செலுத்துவதில்லை.

இறுதிக் கட்டப் போரின்போது இராணுவத்திடம் கையளிக்கப்பட்டும், கடத்தப்பட்டும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கான நீதியை வழங்குவதிலிருந்து ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் தவறிவருகின்றனர்.

இவ்வாறாக வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகத்தில் வாழும் எமது தமிழ் மக்கள் பல்வேறு வழிகளிலும் ஆட்சியாளர்களால் துன்பப்படுகின்றனர்.

தற்போது தமிழர் தாயகப் பரப்பில் பெரும்பான்மையினக் குடியேற்றங்கள் தீவிரப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரிய அளவில் திட்டமிட்ட பெரும்பான்மையினக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஏற்கனவே தமிழர் தாயகப்பரப்பில் அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் இவ்வாறான திட்டமிடப்பட்ட பெரும்பான்மையினக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு அங்கு திட்டமிட்டு சிங்களக்குடியேற்றங்களை ஏற்படுத்தியதன் மூலம் அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களை பெரும்பான்மையினத்தவர்களின் ஆதிக்கத்தின் கீழ் தற்போது ஆட்சியாளர்கள் கொண்டுவந்துள்ளனர்.

ஆட்சியாளர்களின் திட்டமிட்ட பெரும்பான்மையினக் குடியேற்றங்களின் அடுத்தகட்ட செயற்பாடுகள் முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களை நோக்கி நகர்கின்றன.

எனவே இவ்வாறாக தமிழர்களுக்கு ஆட்சியாளர்களால் அநீதி இழைக்கப்படும்போது நாம் அதற்கெதிராக நீதிக் குரல் எழுப்பாமல் இருக்கமுடியாது.

இவ்வாறு தமிழர்கள் மீது ஆட்சியாளர்கள் அடக்குமுறைகளைப் பிரயோகிக்கும்போது, இலங்கையின் சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் தமிழர்களால் எவ்வாறு பங்கேற்கமுடியும்?

ஆட்சியாளர்கள் தமிழ் மக்கள் மீது இவ்வாறாக அடக்குமுறைகளை பிரயோகிக்கின்றபோது, தமிழ் மக்கள் அதற்கெதிராக போராடுவதற்காக வீதிக்கு இறங்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

எனவே ஆட்சியாளர்கள் தமிழர்களை இந்தநாட்டில் சுதந்திரமாக வாழ்வதற்கு இடமளிக்கவேண்டும்.

ஆட்சியாளர்களால் இவ்வாறு பல வழிகளிலும் தமிழர்கள் மீது அடக்குமுறைகள் பிரயோகிக்கப்படுகின்ற நிலையில், சிலஅமைச்சர்கள் வேடிக்கையான கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். தமிழ் மக்களுக்கு நன்மைகளைச் செய்வதாகவும், உதவிகளைச் செய்வதாகவும் பாரிய பொய்களைக் கூறி வருகின்றனர்.

தமிழர் தாயகப்பரப்பிலுள்ள தமிழ் மக்கள் இலங்கையின் சுதந்திர தினத்தைக் கொண்டாடும் நிலையில் இல்லை. எனவே தமிழ் மக்களுக்குரிய அதிகாரங்களைப் பகிர்ந்தளியுங்கள். தமிழர்களுக்கு ஓர் அர்த்தமுள்ள அரசியல் தீர்வை வழங்க முன்வாருங்கள். உரிமைகளை வழங்குங்கள். கடந்தகாலத்தில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதியை வழங்குங்கள். தமிழ் மக்களை இந்தநாட்டில் சுதந்திரமாக வாழ விடுங்கள்.

இந்தநாட்டில் தமிழ் மக்கள் சுதந்திரமாக இல்லை. ஆட்சியாளர்களால் அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள்என்பதாலேயேஇலங்கையின்சுதந்திர நாளை கரிநாளாக பிரகடனப்படுத்தி வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்களால் வீதியில் இறங்கி இவ்வாறான மாபெரும் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வடக்கு, கிழக்கு தமிழர்தாயகப் பரப்பில் தமிழ் மக்கள் தமக்குரிய அதிகாரங்கள், உரிமைகளுடன் எப்போது தன்நிறைவுபெற்று சுதந்திரமாக வாழ்கின்றார்களோ அன்று தான் தமிழ் மக்களுக்கு சுதந்திரநாள் – என்றார்.

# போராட்டக்காரர்களின் பஸ்ஸில் போதைப் பொருளை வைத்து போராட்டத்தை அடக்கும் மிகக் கேவலமான செயலில் பொலிஸ்

## ஏறாவூர் பற்று பிரதேச சபை உறுப்பினர் நிலாந்தன் கண்டனம்

(பழுவூரான்)

போதைப் பொருளை வைத்து பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் போராட்டத்தை அடக்கும் மிக கேவலமான குற்றச் செயல்களை செய்யும் அளவுக்கு அநுர அரசாங்கத்தில் உள்ள பாதுகாப்பு தரப்பின் மன நிலை உள்ளதாகவும், இதனை வன்மையாகக் கண்டிக்கின்றார் எனவும் சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஏறாவூர் பற்று பிரதேச சபை உறுப்பினருமான செ.நிலாந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற போராட்டத்தை முடக்குவதற்கும், அடக்குவதற்கும் பாதுகாப்பு தரப்பினர் கையாண்ட நடைமுறைகள் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:ஃ

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற சுதந்திர தின கரிநாள் போராட்டத்திற்கு அம்பாறையில் இருந்து வருகை தந்த காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க உறுப்பினர்களை ஏற்றி வந்த பஸ்ஸில் கஞ்சா போதைப் பொருளை வைத்து, அவர்களை பொலீஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று கைது செய்ய முயற்சி செய்த செயல் ஜனநாயகத்திற்கும், போராடும் மக்களின் கருத்து சுதந்திரத்திற்கும், மனித உரிமைகளுக்கு எதிரான செயற்பாடு. வேறு எந்த அரசாலும் மேற்கொள்ளப்படாத செயற்பாடுகளை பாதுகாப்பு தரப்பினர் அநுர அரசில் மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டக்களப்பில் நடைபெற்ற சுதந்திர தின கரிநாள் போராட்டத்தையும் பொலிஸார் தடுத்து நிறுத்தி இருந்தனர்.

தமிழ் மக்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கோரி போராட்டங்களை நடாத்தும் போது அவர்களுக்கு நீதி வழங்காது குற்றவாளிகளை பாதுகாக்கும் அரசு பாதிக்கப்பட்டவர்களை போராடுவதற்கு கூட அனுமதிக்காது போராட்டங்களை வன்முறைகளைப் பிரயோகித்து அடக்குவதை வன்மையாக கண்டிக்கின்றேன்.

இலங்கை ஆங்கிலேயரிடம் இருந்து சுதந்திரம் பெற்று எட்டு வருடங்களிலேயே தமிழர்கள் மீதான அடக்குமுறையை சிங்கள அரசு முன்னெடுக்க தொடங்கியது.

அதாவது 1956 ம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வந்தது முதல் இன்று வரை தமிழர்களுக்கான உரிமைகளை வழங்காது இழுத்தடிக்கின்றது இலங்கை அரசு.

தங்களது தாயகத்தில் சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமைகளுக்காகப் போராட்டம் நடத்தியவர்களையும் கொன்று குவித்தது.

2009 ம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்து 16 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகள் தொடர்ந்து கொண்டே உள்ளது.

தமிழர்களின் உரிமைகளை பறித்தது மட்டும் அன்றி வடக்கு, கிழக்கு மலையகம் என நாட்டின் எல்லா பகுதிகளிலும் வாழ்ந்த தமிழர்களைக் கொன்று குவித்தது.

இன்று இலங்கை மக்கள் தமது சுதந்திரத்தை பிராந்திய, உலக வல்லரசுகளிடம் இழந்து தவிக்கின்றனர்.

இன்று வடக்கு, கிழக்கில் மட்டும் அல்ல, இலங்கையின் முழு பிரதேசங்களிலும் அந்நிய நாடுகளின் ஆதிக்கம் நிறைந்துள்ளது. நாட்டில் உள்ள பல இடங்களை அரசாங்கம் பல நாடுகளின் நிறுவனங்களுக்கு குத்தகைக்குக் கொடுத்துள்ளது.

இன்று இலங்கை அரசாங்கத்தால் சுயாதீனமாக இயங்க முடியாது உள்ளது. இலங்கை நாடு, இலங்கை மக்களுக்கு சொந்தமில்லாமல் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தை பாதுகாப்பதற்காக போராடிவரும் தமிழர்களை அழித்து, அவர்களது வாழ்விடங்களை பறிப்பதற்காகமுயற்சிசெய்வதுஎதிர்காலத்தில்ஒட்டுமொத்த நாட்டையும் வல்லரசுகளிடம் இழப்பதற்கு வழிவகுக்கும். - எனத் தெரிவித்தார்.

# மூடப்படும் அபாயத்தில் உள்ள 1,500 மலையக பாடசாலைகள்

நாட்டில் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை மூடுவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தினால், மலையக மாணவர்களின் இலவச கல்வி உரிமை பாதிக்கப்படலாம் என இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நுவரெலியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட அந்தச் சங்கத்தின் நுவரெலியா மாவட்ட செயலாளர் வேலு இந்திரச்செல்வன் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

50 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட சுமார் 1,500 பாடசாலைகளை மூடுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. எதிர்காலத்தில் இந்த எண்ணிக்கை 3,000 வரை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது மாணவர்கள் 3 கிலோ மீற்றர் சுற்றளவிற்குள் கல்வி கற்கும் வகையில் பாடசாலைகள் அமைந்துள்ளன. எனினும், புதிய சுற்றுநிருபத்தின் ஊடாக இந்தத் தூரத்தை 5 கிலோ மீற்றராக அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு திட்டமிட்ட செயல் எனச் சுட்டிக்காட்டிய அவர், முறையான போக்குவரத்து வசதிகள் இல்லாத நிலையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் மலையக மாணவர்கள் மீண்டும் பழைய நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என கவலை வெளியிட்டார்.

மலையக மாணவர்களின் முன்னேற்றத்திற்கு கல்வி மட்டுமே ஒரே வழி என்பதைக் கருத்தில் கொண்டு, இந்த விவகாரத்தில் அரசாங்கம் மீளாய்வு செய்ய வேண்டும் என அவர் இதன்போது வலியுறுத்தினார்.





# விமான இறக்கைகள் மோதி விபத்து; மும்பையில் பெரும் அனர்த்தம் தவிர்ப்பு

இந்தியாவின் மும்பை சத்ரபதி சிவாஜி மகாராஜ் சர்வதேச விமான நிலையத்தில், நேற்று முன்தினம் இரவு இரண்டு பயணிகள் விமானங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

புறப்படுவதற்குத் தயாராக இருந்த எயார் இந்தியா நிறுவனத்திற்குச் சொந்தமான எயார்பஸ் ஏ 320 விமானமும், ஹைதராபாத்திலிருந்து வருகை தந்த இன்டிகோ நிறுவனத்திற்குச் சொந்தமான எயார்பஸ் ஏ 320 விமானமுமே இவ்வாறு மோதிக்கொண்டன.

இரண்டு விமானங்களும் மிகக் குறைந்த வேகத்தில் பயணித்துக்கொண்டிருந்ததால், பாரிய விபத்து தவிர்க்கப்பட்டுள்ளது. எனினும், மோதிக் கொண்டதில் இரண்டு விமானங்களினதும் இறக்கைகளின் நுனிப்பகுதிகள் சேதமடைந்துள்ளன.

விமானத்தில் இருந்த பயணிகள் மற்றும் ஊழியர்கள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்பதுடன், அனைவரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

விபத்தைத் தொடர்ந்து அந்த விமானப் பயணங்கள் ரத்து செய்யப்பட்டதுடன், பயணிகளுக்கு மாற்று ஏற்பாடுகளை விமான நிறுவனங்கள் மேற்கொண்டுள்ளன.

இந்தச் சம்பவம் குறித்து இந்திய சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் அலுவலகம் முறையான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

விமான நிலையக் கட்டுப்பாட்டு அறையின் அறிவுறுத்தல்கள் மற்றும் விமானத்தைக் கையாண்ட விதம் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்படவுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# ஆந்திரா குற்றவாளிகளை கைது செய்த 'ஏ.எஸ்.ஐ. அர்ஜுன்' ரோபோ பொலிஸ்





இந்தியாவின் ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினம் தொடருந்து நிலையத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள "ஏ.எஸ்.ஐ. அர்ஜுன்" எனும் ரோபோ, பழைய குற்றவாளிகள் இருவரை அடையாளம் கண்டு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளது.

இந்தியாவிலேயே முதல் முறையாக விசாகப்பட்டினம் ரயில் நிலையத்தில் ரயில் பாதுகாப்புப் படையினரால் இந்த ரோபோ பொலிஸ் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

ரயில் நிலையத்திற்குள் வரும் ஒவ்வொருவரினதும் புகைப்படங்களை எடுத்து, சந்தேகத்திற்கிடமான நபர்கள் மற்றும் அடிக்கடி ரயில் நிலையத்திற்கு வருபவர்களை இந்த ரோபோ துல்லியமாக அடையாளம் காணும்

தீ விபத்து அல்லது புகை என்பவற்றை முன்கூட்டியே கண்டறிந்து பயணிகளை எச்சரிக்கும் ஆற்றல் இதற்கு உண்டு.

சேகரிக்கப்படும் தகவல்களை உடனுக்குடன் உயர்மட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், நேற்று முன்தினம் ரயில் நிலையத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த இந்த ரோபோ, அங்கு சந்தேகத்திற்கிடமாக சுற்றித்திரிந்த இருவரை அடையாளம் கண்டு அதிகாரிகளுக்கு தகவல் வழங்கியது. அதனடிப்படையில் செயற்பட்ட பொலிஸார் , அடப்பா சிவா மற்றும் பங்காரு ஆகிய இருவரையும் கைது செய்தனர்.

விசாரணைகளின் போது, கைது செய்யப்பட்ட இருவர் மீதும் ஒடிசா மாநிலத்தின் ராயகடா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பல குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ரோபோவின் நுணுக்கமான கண்காணிப்பு மற்றும் துல்லியமான தகவல் வழங்கும் திறன், பயணிகள் மத்தியிலும், பொலிஸார் மத்தியிலும் பெரும் ஆச்சரியத்தையும், வரவேற்பையும் பெற்றுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# ட்ரம்ப் - கொலம்பியா ஜனாதிபதி வெள்ளை மாளிகையில் சந்திப்பு



நீண்டகாலமாக ஒருவரையொருவர் கடுமையாக விமர்சித்து வந்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் கொலம்பியாவின் இடதுசாரி ஜனாதிபதி கஸ்டாவோ பெட்ரோ ஆகியோரின் முதல் நேருக்கு நேர் சந்திப்பு, எதிர்பாராத வித மாக மிகவும் சுமுகமாக நடந்து முடிந்துள் ளது.

இரு தலைவர்களும் முற்றிலும் மாறுபட்ட அரசியல் கொள்கைகளைக் கொண்டவர்கள் என்பதாலும், கடந்த சில வாரங்களாக ட்ரம்ப் கொலம்பியா மீது இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்து வந்ததாலும் இச்சந்திப்பு பெரும் பதற்றத்தை உருவாக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், வெள்ளை மாளிகையின் ஓவல் அலுவலகத்தில் நடந்த சுமார் இரண்டு மணிநேர உரையாடல் மிகவும் நேர்மறையாக அமைந்தது.

சந்திப்பிற்குப் பிறகு ட்ரம்ப் கருத்துத் தெரிவிக்கையில், பெட்ரோ ஒரு அற்புத மான மனிதர் என்றும், தங்களுக்குள் ஒரு நல்ல சந்திப்பு நடந்ததாகவும் புகழா ரம் சூட்டினார். இது சில வாரங்களுக்கு முன்பு அவரை கொடூரமானவர் என விமர் சித்ததற்கு நேர்மாறாக அமைந்தது.

இந்தச் சந்திப்பின் போது, ட்ரம்ப் தனது புகழ்பெற்ற 'The Art of the Deal' புத்தகத்தில் "நீங்கள் ஒரு சிறந்தவர்" என கையெழுத்திட்டு பெட்ரோவுக்கு பரிசாக வழங்கினார்.

இதற்குப் பதிலாக, பெட்ரோ தனது நாட்டின் பாரம்பரிய "வூனான்" கைவி னைப் பையை ட்ரம்ப்புக்கும், கைகளால் நெய்யப்பட்ட ஆடையை மெலனியா ட்ரம்ப் புக்கும் பரிசாக வழங்கினார்.

சந்திப்பின் போது போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான போர் மற்றும் வெனிசு வேலாவின் அரசியல் நிலைத்தன்மை குறித்து விவாதிக்கப்பட்டது.

கொலம்பியாவிலிருந்து அமெரிக்கா விற்குள் நுழையும் கொக்கேய்ன் போதைப் பொருளைக் கட்டுப்படுத்த பெட்ரோ அரசாங் கம் இன்னும் தீவிரமாகச் செயல்பட வேண்டும் என ட்ரம்ப் வலியுறுத்தி னார்.

அண்மையில் அமெரிக்காவினால் நிக்கோலஸ் மதுரோ கைது செய்யப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து, வெனிசுவேலா வின் எதிர்காலத்தை ஸ்திரப்படுத்துவ தில் கொலம்பியாவின் பங்கு குறித்து ஆலோசிக்கப்பட்டது.

பெட்ரோ தனது நாட்டின் "மேக் த அமெ ரிக்காஸ் கிரேட் அகெய்ன்" என்ற கருத் தியலை முன்வைத்தார்.

இது வட மற்றும் தென் அமெரிக்காக் கள் இணைந்து பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டும் என்பதைக் குறிக் கிறது. எவ்வித பெரிய ஆரவாரங்களும் இன்றி தனிப்பட்ட முறையில் நடந்த இச்சந்திப்பு, இரு நாடுகளுக்கும் இடையி லான விரிசலைச் சரிசெய்யும் ஒரு முக்கிய மைல்கல்லாகப் பார்க்கப்படுகிறது.

# அமெரிக்கப் போர்க்கப்பலை நெருங்கிய ஈரானிய ட்ரோன் சுட்டு வீழ்த்தப்பட்டது



அரபிக்கடலில் நிலைநிறுத்தப்பட் டுள்ள அமெரிக்காவின் "யுஎஸ்எஸ் ஆபிர காம் லிங்கன்" விமானம் தாங்கிப் போர்க் கப்பலை நோக்கி அச்சுறுத்தும் வகையில் வந்த ஈரானிய ஆளில்லா விமானம் ஒன்றை அமெரிக்கப் படையினர் சுட்டு வீழ்த்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகி றது.

அமெரிக்க மத்திய கட்டளையகத் தின் செய்தித் தொடர்பாளர் கெப்டன் டிம் ஹாக்கின்ஸ் இதனை தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்,

"ஈரானிய கடலோரத்திலிருந்து சுமார் 500 மைல் தொலைவில் அமெரிக்கப் போர்க்கப்பல் பயணித்துக் கொண்டிருந்த போது ஈரானின் "ஷாஹித்-139" ரக ஆளில்லா விமானம் ஒன்று ஆக்ரோஷ மான முறையில் கப்பலை நெருங்கியது.

கப்பலில் இருந்த வீரர்களையும் உபகர ணங்களையும் பாதுகாக்கும் நோக் கில், கப்பலில் இருந்து புறப்பட்ட F-35C ஸ்டெல்த் போர் விமானம் அதனை சுட்டு வீழ்த்தியது.

இந்தச் சம்பவத்தில் அமெரிக்கத் தரப்பில் எந்த உயிர்ச்சேதமோ அல்லது உபகரண பாதிப்புகளோ ஏற்படவில்லை." என தெரிவித்தார்.

இதே நாளில் மற்றொரு சம்பவமாக, உலகின் பரபரப்பான எண்ணெய் போக்கு வரத்து பாதையான ஹார்முஸ் நீரிணை யில் அமெரிக்கக் கொடியுடன் பயணித்த வர்த்தகக் கப்பல் ஒன்றை ஈரானின் இஸ் லாமிய புரட்சிகர காவல்படை அச்சுறுத்திய தாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

எனினும், அமெரிக்க இராணுவத் தின் தலையீட்டைத் தொடர்ந்து அந்த நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்ட தாக தெரிவிக்கப்படுகிறது.

ஈரான் தனது அணுசக்தி திட்டங்க ளைக் கட்டுப்படுத்தாவிட்டால் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தொடர்ச் சியாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்து வருகிறார்.

இருப்பினும், இராஜதந்திர ரீதியிலான தீர்வுக்கான முயற்சிகளும் ஒருபுறம் நடந்து வருகின்றன.

துருக்கியின் இஸ்தான்புல் நகரில் நடைபெறவிருந்த பேச்சுவார்த்தைகளை, ஓமானுக்கு மாற்ற வேண்டும் என்றும், அதில் ஈரான் மற்றும் அமெரிக்க அதி காரிகள் மட்டுமே பங்கேற்க வேண்டும் என்றும் ஈரான் கோரிக்கை விடுத்துள்ள தாகத் தெரிகிறது.

ஈரானிய ஜனாதிபதி மசூத் பெசெஷ்கி யான், சரியான சூழல் நிலவும் பட்சத்தில் பேச்சுவார்த்தைக்குத் தயார் எனத் தெரிவித் துள்ளார்.

மறுபுறம், ஈரானில் நிலவும் பொரு ளாதார நெருக்கடி மற்றும் ஆட்சி மாற்றத் தைக் கோரி நடக்கும் போராட்டங்களில் உயிரிழப்போர் எண்ணிக்கை அச்சமூட் டும் வகையில் அதிகரித்துள்ளது.

மனித உரிமை அமைப்பான HRANA வெளியிட்டுள்ள தரவுகளின்படி, இது வரை 6,424 போராட்டக்காரர்கள் கொல லப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட் டுள்ளது.

இதில் 152 சிறுவர்கள் அடங்குவர். இதற்கிடையில், சுமார் 25,000 பேருக் கும் மேல் உயிரிழந்திருக்கலாம் என சில சர்வதேச அமைப்புகள் அச்சம் தெரி விக்கின்றன.

ஈரான் மீதான அமெரிக்காவின் அழுத்தங்கள் மற்றும் பிராந்தியத்தில் அதிகரித்து வரும் இராணுவ நடமாட் டங்கள் காரணமாக, மத்திய கிழக்கில் மீண்டும் ஒரு போர் மூளும் அபாயம் ஏற் பட்டுள்ளதாக சர்வதேச அரசியல் ஆய் வாளர்கள் கருதுகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் -05.02.2026




இன்று அதிர்ஷ்டமான நாள் . கடினமான பணிகளையும் என்று எளிதாக முடிப்பீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

இன்று திட்டமிட்டபடி பணிகளை செய்து முடிப்பீர்கள். உங்களின் திறமை காரணமாக நீங்கள் உங்கள் உங்கள் சக பணியாளர்களை காட்டிலும் முந்தி இருப்பீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் இது சாத்தியம்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். நீங்கள் அதிக பணம் சம்பாதிபீர்கள்.

இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நீங்கள் சுய வளர்ச்சிக்கான செயல்களில் ஈடுபட ஏற்ற நாள். என்றாலும் இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. நெருங்கிய நண்பர்கள் கூட நம்பிக்கை துரோகம் செய்வார்கள்.

பணிகள் சலிப்பை தருவதாக இருக்கும். இதனால் சோர்வு காணப்படும். பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். இதனால் உறவில் இடையூறுகள் ஏற்படும். இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக பண நஷ்டம் ஏற்படலாம். கவனமாக இருக்க கற்றுக் கொள்ளுங்கள்.

உங்கள் கண்களில் கவனம் செலுத்த வேண்டும். கண் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று ஆன்மீக விஷயங்களில் ஈடுபடுவதற்கு உகந்த நாள். இன்று பிரார்த்தனை மேற்கொள்வது மற்றும் இசை கேட்பது உங்களுக்கு ஆறுதலைத் தரும். இந்த நாட்டங்கள் தான் நீங்கள் விரும்பும் ஆறுதலை உங்களுக்கு பெற்றுத் தரும்.

பணியிடத்தில் கடுமையான பணிகள் காணப்படும். உங்கள் செயல்திறனை மேம்படுத்த நீங்கள் விழிப்புடன் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் கடுமையாக வன்மையாக நடந்து கொள்வீர்கள். இத்தகைய போக்கு உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பணப்புழக்கும் குறைந்து காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

தோல் எரிச்சல் காணப்படும். எண்ணெய் பதார்த்தங்கள் உண்பதை தவிர்க்க வேண்டும்.




உங்கள் திறமையான தொடர்பு மூலம் நல்ல பலன்களைக் காண முடியும். ஆன்மீகத்தில் ஈடுபடுவது மற்றும் மந்திர உச்சாடனம் செய்வது ஆன்மீக சொற்பொழிவுகள் கேப்பதன் மூலம் சிறப்பாக உணரலாம்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். உங்களின் கடின உழைப்பு மூலம் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

குடும்ப பிரச்சினை சம்பந்தமான உங்கள் கருத்துக்களை உங்கள் துணையுடன் மனம் திறந்து ஆலோசிப்பீர்கள். உங்கள் அகந்தை போக்கை முறியடிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும். உங்களிடம் உள்ள பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு பயன்படுத்துவீர்கள்.

நீங்கள் ஆற்றலுடன் காணப்படுவீர்கள். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று கடினமான சவால்கள் காணப்படும். நீங்கள் திறமையாக கையாள வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதல் தரும். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்ப்பது நல்லது.

இன்று அதிகப்படியான பணிகள் காணப்படும். சில சவாலான சூழ்நிலைகளை சமாளிக்க நேரும்.

உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் நேரலாம். உங்கள் பொறுமையை இழப்பீர்கள். இது உங்கள் உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். தேவையற்ற மருத்துவ செலவுகள் ஏற்படும்.

அதிக சிந்தனை காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது அமைதியாக இருப்பது சிறந்தது.




இன்று நீங்கள் கவலைக்கு ஆளாகலாம். இதனால் உங்கள் அடிப்படை பணிகளைக் கூட உங்களால் செய்ய இயலாது. சகஜமான அணுகுமுறை தேவை.

தன்னம்பிக்கையின்மை காரணமாக இன்று பணியில் மந்த நிலை காணப்படும்.உங்கள் பணிகளை திட்டமிட்டு அமைத்துக் கொள்வது சிறந்தது.

உங்கள் துணையுடன் காணப்படும் கருத்து வேறுபாடு காரணமாக இருவரும் நல்லுறவை பராமரிக்க இயலாது.

இன்று அதிக செலவுகள் காணப்படும். இன்று காணப்படும் பொறுப்புகள் எதிர்கொள்ள கடன் வாங்க நேரும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.




அனைத்து விஷயங்களிலும் பொறுமை தேவை. மனதில் குழப்பத்திற்கு ஆளாகாதீர்கள். எந்த செயலையும் செய்வதற்கு முன்பு ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்கவும். சிறிது மந்தமாக காணப்படுவீர்கள்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவதில் சில தடைகளும் ஏமாற்றங்களும் காணப்படும். சகபணியாளர்களுடன் நல்லுறவு காணப்படாது.

உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. மகிழ்ச்சியை தக்க வைக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். உங்கள் செலவுப் பழக்கத்தை கட்டுபடுத்துவது நல்லது.

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. முதுகு வலி ஏற்படும் வாய்ப்பு உள்ளது.




இன்று உங்கள் வளர்ச்சியில் முன்னேற்றம் கிடைக்கும் வகையிலான நற்பலன்கள் காணப்படும்.பிறருடன் சுமூகமாகப் பழகுவது நன்மை தரும். வாழ்வின் நன்மைகளையும் தீமைகளையும் நீங்கள் உணர்வீர்கள்.

உங்கள் கடின உழைப்பு காரணமாக உங்கள் மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவீர்கள். உங்கள் பணிகளை திறமையாக மேற்கொள்வீர்கள்.

உங்களின் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இது நல்ல புரிந்துணர்விற்கு வழி வகுக்கும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். சம்பாத்தியம் அதிகரிக்கும். நீங்கள் கணிசமான தொகையை சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -05.02.2026




இன்று செயல்பாடு மிக்க நாளாக இருக்காது. பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மகிழ்வைத் தரும். இன்று செயல்கள் சுமூகமாக நடைபெறாது.

பணியிடத்தில் முன்னேற்றம் காணப்படாது. கவனக்குறைவு காரணமாக தவறுகள் நடக்க வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளி மேற்கொள்ளும் பொழுது நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படாது. உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு மற்றும் வாக்குவாதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். இதனால் பணம் இழந்து கவலைப்படுவீர்கள்.

உங்களிடம் பதற்றமும் பாதுகாப்பின்மையும் காணப்படும். நீங்கள் ஆரோக்கியமாய் இருக்க அமைதியாய் இருக்க வேண்டும்.




இன்று செயல்பாடு மிக்க நாளாக இருக்காது. இன்று பொறுமையாக இருக்க வேண்டியது அவசியம். இன்று குறைந்த எதிர்பார்ப்புடன் காரியம் ஆற்றினால் அதற்குண்டான வெகுமதி கிடைக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். திறமையாக பணியாற்ற திட்டமிட வேண்டியது அவசியம்.

குடும்பத்தில் மகிழ்ச்சியான தருணங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு கிடையாது. உங்கள் துணையுடன் உரையாடும்போது வார்த்தைகளில் கவனம் தேவை.

நிதிநிலைமை மோசமாக காணப்படும். கூடுதல் பணம் செலவு செய்வீர்கள். சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.

கால் மற்றும் தொடை வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. சிகிச்சை மேற்கொள்வது நல்லது.




இன்றைய நாள் அவ்வளவு சிறப்பான பலன்கள் கிடைக்காது. தைரியம் குறைந்து காணப்படும். என்றாலும் நம்பிக்கையுடன் தைரியமான மன ஆற்றலுடன் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று அதிக பணிகளை சுமக்க நேரும். உங்கள் சக பணியாளர்களுடனான உறவு திருப்திகரமாக இருக்காது. நீங்கள் சம்பவங்களை கவனமாக கையாள வேண்டும்.

உறவில் திருப்தியற்ற உணர்வு காணப்படும். குடும்பத்தில் மகிழ்ச்சியை தக்க வைக்க உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும்.

பண வளர்ச்சி திருப்திகரமாக இருக்காது. இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. முறையற்ற உணவு முறை காரணமாக செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும்.




உங்கள் முயற்சியில் வெற்றி கிடைக்கும் நாள். உங்களின் விட்டுக் கொடுத்துபோகும்அனுகுமுறைகாரணமாக நல்ல பலன்கள் கிடைக்கும். நல்ல உறவை பராமரித்து உங்கள் நண்பர்கள் மற்றும் அக்கம் பக்கத்தவரின் நல்லுறவைப் பெறுவீர்கள்.

பணியிடச் சூழல் இன்று உங்களுக்கு சாதகமாக இருக்கும். நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். சக பணியாளர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

உங்கள் சகஜமான மற்றும் நட்பான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

நிதி வளர்ச்சி திருப்திகரமாக இருக்கும். கணிசமான தொகை சம்பாதிக்கும் அதிர்ஷ்டம் காணப்படும்.

இன்று நீங்கள் ஆற்றலுடன் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள். ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் இருக்காது.

# உமையாள்புரத்தில் வெடிக்காத கைக்குண்டு






(பூ.லின்ரன்)

கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் நேற்றைய தினம் பிற்பகல் வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்று இனங்காணப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் சிறுவர்கள் தமது பொழுதுபோக்கு நடவடிக்கைக்காக நீர் ஓடும் வாய்க்கால் அருகாமையில் சென்ற போது வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்றை அவதானித்து உள்ளனர்

உடனடியாக அச் சிறுவர்கள் கிளிநொச்சி பொலிஸாருக்கு அறிவித்த போது சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் ஆபத்தான நிலையில் காணப்பட்ட கைக்குண்டை உரிய பாதுகாப்புடன் அகற்றுவதற்கு கிளிநொச்சி நீதிமன்ற உத்தரவுக்கு தகவலை அனுப்பியுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவு கிடைக்கும் வரை அந்த இடத்தில் கிளிநொச்சி பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.